# PAFFREL

නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරීත්වය.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.

**PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS**

2025.06.09

செய்தி ஆசிரியர் /பத்திராதிபர்,

வாக்களிக்கத் தகுதியுள்ள அனைத்து இலங்கை குடிமக்களும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவது அவசியம். 2025 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலைத்திருத்தும் பணியை தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

அதே போன்று, வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களைப் பதிவு செய்வதன் அவசியம் தொடர்பில் பல்வேறு வழிகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்க பெ..ஃ.ப்ரல் அமைப்பு தொடர்ந்து செயல்பட்டுவருகிறது, மேலும் இந்த செயல்முறையை முக்கியமானதொரு கடமையாகக் கருதி, அதற்குப்போதுமான விளம்பரத்தை வழங்குமாறு ஊடக அமைப்பான தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, பெப்ரல் அமைப்பினால் கட்சிசெயலாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கு இது தொடர்பாக அறிவிப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரதியினை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி.

உங்கள் உண்மையுள்ள,

ரோஹனா ஹெட்டியாராச்சி,
நிறைவேற்றுப் பணிப்பாளர்

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.
Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572
Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

**வாக்களிப்பது உங்கள் உரிமை. எனவே, உங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்க இன்றே செயல்படுங்கள்.**

**வாக்காளர் இடாப்புதிருத்தம் 2025**

**நீங்கள் வாக்காளரொருவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ளீர்களா என்பதைச் சரிபார்க்க இதுவே சரியான தருணம்.**

**வாக்காளரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு தேவையான அடிப்படைத் தகைமைகள்**

⇨ இலங்கைக் பிரஜையாக இருத்தல்

⇨ 18 வயதுபூர்த்தியானவராக இருத்தல்

⇨ விண்ணப்பதாரரின் சாதாரண வதிவிடத்தைக் கொண்டவாராக இருத்தல்.

நீங்கள் வாக்காளரொருவராக பின்வரும் முறைகளில் பதிவுசெய்யலாம்,

√ஒன்லைன் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் https://eservices.elections.gov.lk/pages/home.aspxஎன்ற இணைப்பின் மூலம்..

√குறித்தபிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரைச் சந்திப்பதன் மூலம்.

**நீங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளீர்களாஎன்பதைச் சரிபார்த்தல்.**

எந்தக் காலப் பகுதியில் இதனைச் செய்யலாம் ?

2025 ஜுலைமாதம் 11 ஆந் திகதி தொடக்கம் 2025 ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதி வரை

நீங்கள் வாக்காளரொருவராக பதிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை எந்தெந்த இடங்களில் சரிபார்க்கலாம்.

- தேர்தல் ஆணைக்குழுவின்ஒன்லைனில்https://eservices.elections.gov.lk/pages/home.aspxஎன்ற இணைப்பின் மூலம்.
- மாவட்டதேர்தல் அலுவலகங்கள்,
- பிரதேச செயலகங்கள்,
- கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள்

**வாக்காளரொருவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ளீகளா என்பதை சரிபார்த்த பின்னர்,**

- உங்கள் பெயர் அல்லதுஉங்கள் குடும்ப உறுப்பினர்களில் எவரினதும் பெயர் அதில் சேர்க்கப்படவில்லையாயின்
- உங்களதுபெயர் சேர்க்கப்படாது வேறுபெயர்கள் அதில் சேர்க்கப்பட்டிருந்தால்
- உங்கள் பெயர் வேறொருபட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தால்

**அல்லது**

- உங்கள் பகுதியில் வதிவோரின்பட்டியலில் வேறொரு பகுதியைச் சேர்ந்த ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தால்

**என்ன செய்ய வேண்டும்?**

❖ ஊடனடியாக அதனைச் சரிசெய்ய ,உங்கள் கிராம உத்தியோகத்தரைச் சந்தித்து தொடர்புடைய கோரிக்கை படிவம் அல்லது ஆட்சேபனை படிவத்தை நிரப்பி உங்கள் மாவட்டத்தின் உதவி/பிரதித் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவும்..

- ❖ வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், உடனடியாக பெப்ரல் அமைப்பின் விசேடஉதவி வழங்கும் மத்திய நிலையத்துடன் இன்றே தொடர்பு கொள்ளவும்


பெ.ஃ.ப்ரல் அமைப்பின் விசேட உதவி வழங்கும் மத்தியநிலையம்

தொலைபேசி - 011-2558570/71
தொலைநகல் - 011-2558572
கையடக்கத் தொலைபேசி/வாட்ஸ்அப் - 0704232688
மின்னஞ்சல் - paffrel@sltnet.lk
முகவரி– பெ.ஃ.ப்ரல்அமைப்பு,
இலக்கம். 16, பயடர் பிளேஸ்,
பாமன்கடைவீதி,
கொழும்பு 06.